சிவமயம்.

கயிலாய பாரம்பரையிற் சிவஞானபோதநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவாவடுதுறை வாழ்குரு
நமச்சிவாய தேவன்
கயிலாதி மரபுடையோன் திருமரபுநீடுழி
தழைக மாதோ.

1394
(6371)

சிவநேசச்செல்வர்களே!!

சைவஆதீனங்களின் மகிமைகளை யென்றாற் சொல்லற்கரியது ஆயினுந் தெரிந்தவரை சுருக்கமாகவெழுதுகிறேன்.

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கிற பரமேசுரர் திருவருளால் விண்ணுலகிற்கும்மண்ணுலகிற்கும் பக்குவர்களுக்கு உபதேசித்தருளும் வண்ணம் உமாதேவியார், திருநந்திதேவர் முருகக்கடவுள், திருமால், பிரமன், சூரியன், இந்திரன் முதலோர்கட்கு சிவதீக்ஷைசெய்து வேதசிவாகமங்களை உபதேசித்து ஆசாரிய அபிடேகஞ்செய்து ஆசிரியத்தலைமையுங் கொடுத்தருளினார்.

இவர்களாலே திருநந்திதேவர் சனற்குமாரமுனிவர் முதலானவர்கட்கும் அச்சனற்குமார முனிவர் சத்தியஞானதெரிசனிகட்கும் அவர்பரஞ்சோதிமாமுனிவர்க்கும் அவர்பொல்லாப்பிள்ளையாரிடங்கற்ற மெய்கண்டதேவருக்கும் அவர் அருணந்தி சிவாசாரியார் முதலாக நாற்பத்தொன்பதின்மருக்கும் அருணந்தி சிவாசாரியார் மறைஞானசம்பந்தசிவாசாரியருக்கும் அவர் தில்லைமூவாயிரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர்க்கும் அவர் அருணமச்சிவாயருக்கும் அவர் சித்தர்சிவப்பிரகாசருக்கும் அவர் திருவாவடுதுறையிலெழுந்தருளிய நமசிவாய மூர்த்திகட்கும் அவர் மறைஞானத்தேசிகருக்கும் அம்பலவாணதேசிகருக்கும் அவ்வம்பலவாணதேசிகர் உருத்திரகோடி தேசிகருக்கும் அவர் வேலப்பதேசிகருக்கும் அவர் முற்குமாரசுவாமி தேசிகருக்கும் அவர் பிற்குமாரசுவாமி தேசிகருக்கும் அவர் மாசிலாமணி தேசிகருக்கும் அவர் இராமலிங்க தேசிகருக்கும் அவர் முன்வேலப்பதேசிகருக்கும் அவர் பின்வேலப்ப தேசிகருக்கும் அவர் திருச்சிற்றம்பலதேசிகருக்கும் அவர் அம்பலவாண தேசிகருக்கும் அவர் சுப்பிரமணிய தேசிகருக்கும் அவர் அம்பலவாண தேசிகருக்கும் அவர் சுப்பிரமணிய தேசிகருக்கும் ஆசாரிய அபிடேகம் செய்து உபதேசித்தருளினார். இவர்களுடைய அற்புதசரிதங்களை இப்போ

MAHAMAHOPADHYAYA

திருக்கிற பூசைத்தம்பிரான் என்கிற சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமி எழுதி ஒரு புத்தகமாக்கி அச்சிட்டிருக்கின்றனர். அதிற் பார்த்தால் நன்குவிளங்கும்.

திருவாவடுதுறையிலெழுந்தருளிய நமசிவாயகுரு மூர்த்தி முதற்சுப்பிரமணியதேசிகர்வரை பதினாறுபட்டமாயினது. இந்தப் பதினாறாவது பட்டத்திலிருந்த சுப்பிரமணிய தேசிகர்வரை கல்விமான்களாய் சிவதீக்ஷை ஆசாரிய அபிடேக உபதேசங்களை ஒழுங்காகப் பெற்றவர்களாய் பக்குவர்கட்கு உபதேசித்தவராய சிவாலய மடாலயங்களிலே நித்தியபூசை திருப்பணி உற்சபாதிகள் சிறப்பாக நடத்தினவராய் மடாலயத்தில் மகேசுவர பூசை ஏழைகட்கன்னதானம் வித்தியாதானம் முதலியவற்றை சிறப்பாக நடத்தினவராயிருந்தனர். திருவாவடுதுறை நமசிவாயமூர்த்தி முதலாக பதினாறுபட்டம் வரையுள்ளவர்களுடைய ஞானம, வயிராக்கியம், நல்லொழுக்கம், தெய்வத்தன்மை, அனுக்கிறகங்களைத் தெரிந்த தமிழ்நாட்டிலுள்ள சிவநேசச் செல்வர்களாகிய முடிமன்னர்கள் குருநிலமன்னர்களாகிய் சமீந்தார்கள், பிரபுக்கள், உத்தியோகஸ்தர் முதலானவர்கள் காசிமுதற் கன்னியாகுமரிவரை மடாலயங்களையும் கிராமங்களையும் நிலங்களையுந் தானஞ்செய்திருக்கின்றார்கள்.

திருமலைநாயக்கர் மைத்துனர் சிவந்தியப்பநாயக்கர் யீசான பிரானுக்காக திருநெல்வேலி யீசானமடாலய முதலாக எட்டு மடாலயங்களையும், சிவநதிபுர முதலான [illegible] ம். பூமிகளையுங்கட்டித் தானஞ்செய்திருக்கின்றனர். ஈசான தம்பிரானுக்கு இறுஞ்செய்தபடியால்' ஷை எட்டுமடத்திற்கும் ஈசானமடாலயமென்றும சிவந்தியப்ப நாயக்கர் தானஞ்செய்தனர் என்பது விளங்கஅவர்விட்டபிரதானமானகிராமத்திற்குசிவந்திபுரமென்றும் பெயரிட்டனர். இங்ஙனம் தானஞ்செய்தது சற்றேறக்குறைய மூந்நூறுவருடங்களுள்ளேயாகும். திருவாவடுதுறையாதீனத்திற்கு காசிமுதற் கன்னியாகுமரிவரை மூந்நூறு கிளை மடாலயங்கள் உளவாகும். பிரதானமான திருவாவடுதுறை மடத்தில் ஒடுக்கத்தை திருச்சிறுபள்ளிக்கடுத்த மண்ணச்சநல்லூரிலிப்போதும் சீவந்தராய்வசிப்பாராகிய ஸ்ரீமான் மைனர்ஆவுடையப்பபிள்ளையவர்களின் மூதாதைகளாகிய ஆவுடையப்பபிள்ளை சந்திரசேகரம் பிள்ளை அவர்களால் கட்டி அநேக கிராமம் பூமிகளுடன் தானஞ்செய்யபட்டது. அவ்விதம் மடாலயத்துடன் பூமிகளையும் தானம்செய் அவ் ஆவுடையபபிள்ளை சந்திரசேகரம் பிள்ளையவர்கள் நன் பாராட்டி அவர்களை சிலாவிக்கிரகஞ்செய்து திருவாவடுதுறையி பண்டாரசந்நிதியவர்கள் வசிக்குமிடமாகிய ஒடுக்கத்தில் தா

னஞ்செய்யப்பட்டிருக்கின்றது. திருவானைக்கா சத்திரமும் இவர்கள் சந்ததியார்களால் விடப்பட்டது. இதன் விபரம் மேற்படி சத்திரத்தின் முன்முகப்பில் எழுதியிருக்கிற சிலாசாசனத்தாலினிது விளங்கும். இவ்விதமே தருமசொத்தென்பது * ஒவ்வொரு கிராமங்களின் பெயராலேயும் தெரியவரும்.

இவைகளிலே ஸதா விபுலாக நியாயம் ஒருபானை சோற்றுக்கொன்றை யெடுத்துப்பதம் பார்க்கிறது என்றபடி ஒன்றை யெடுத்துக்காட்டுகிறேன். நமசிவாயமூர்த்திக்குப்பின் பன்னிரண்டாவது பட்டத்திலிருந்த திருச்சிற்றம்பல தேசிகர் அடியவர் திருக்கூட்டத்துடன் இராமேசுவர யாத்திரை செய்து வரும்போது, இராமநாதபுரத்தில் வந்தெழுந்தருளியிருந்தனர். அப்போதிருந்த சேதுபதியவர்கள் அநேக நாளாக மழையில்லையே மகான்கள் வந்ததினாலே மழைபெய்யவேண்டுமெனறார்களாம். அதைத்தெரிந்த திருச்சிற்றம்பல தேசிகசுவாமிகள் தாமிருந்த மடாலயத்தின் முற்றத்திலே மத்தியான வெயில் வேளையிற் பலகை யிடசசொலலி அதிலெழுந்தருளி நிட்டையிலிருந்து அடியார் திருக்கூட்டங்களை பஞ்சாக்கரமந்திரஞ் செபிக்கவும், ஓதுவாமூர்த்திகளை மேகராகக்குறிஞ்சியென்னும் பண்ணுடைய தேவாரத்தை யோதும்படியும். கட்டளையிட்டிருந்தனர் உடனே நாடெல்லாஞ்செழிக்க நன்மழை பெய்தது. அதுகண்டு சேதுபதி யவர்களாச்சர்யமடைந்து இப்படியிருக்கிற சைவாதீன குருமூர்த்திகளடியார்கள் திருவயிற்றிலே நம்முடைய வன்னஞ்சேர்ந்தால் நமக்கும் நம்முடைய சமஸ்தானத்திலுள் ளவர்கட்கும் புண்ணியமும் புக மெய்துமென்றுசொல்லி காணிக்கை வைத்து வணங்கி இருப்பெ கோட்டையென்னும் நகரத்தை தானமாகச் செப்புப் பட்டயத்திலே எழுதிக்கொடுத்ததுடன் தனதரண்மனையின் பக்கமுள்ள முகவையூரணிக்கரையிலும் இராமேசுவரத்திலும் உத்தரகோசமங்கையிலும் தன் குருவுக்கு மடாலயங்களுடன் வள்ளக்குளமென்ற கிராமத்தையும மடாலயங்களிற் சபாபதி பூஜை மகேசுரபூஜை சிறப்பாக நடந்துவர மகமையு மேற்படுத்தினார்கள்.

---

* ஈசானமடம் எட்டாவன:–1. திருநெல்வேலியீசானமடம், 2. திருப்புடைமருதூர் யீசானமடம், 3. செவவல் யீசானமடம், 4. பாவநாசம் யீசானமடம், 5. முரப்பநாடு யீசானமடம், 6. வள்ளியூர் யீசானமடம், 7, சுசீயந்திரம் நாயக்கர் மடம், 8. கன்னியாகுமரி யீசானமடம்.

சிவந்தியப்ப நாயக்கர் விட்ட இனாங்கிராமங்கள்:–1 சிவந்திபுரம், 2, வாகைக்குளம், 3 வல்லாங்கோட்டை, 4 துவாசி, 5 சிவணிகுளம், 6 விருதுபட்டி, 7 முரப்பநாடு இனாம் நிலங்கள், 8 கடம்பன்குளம், 9 நாயக்கர் கோணம்.

MAHAMAHOPADHYAYA

திருப்பொறக்கோட்டை விட்டகாலத்தில் ஷெசெப்புப்பட்டயத்திலுள்ள வெண்பா வருமாறு

நதியாய் விரிசிலை நன்னகர் பொற்கோட்டை
பதியாம் துறைசைப்பதிக்கு—விதியாக
தானமிட்டான் சேதுபதி தாரணிதானுள்ளளவும்
ஈனமில்லை யென்றெந்நாளும்.

இவ்வாறே முடிமன்னர்களாய சேரசோழ பாண்டியரும் குறுநில மன்னர்களாய அநேக சமீந்தார்களும் பிரபுக்களும் குரு லிங்க சங்கமர்கட்குத் தானஞ்செய்திருக்கின்றார்கள். சோழவந்தானிலிருந்த புண்ணிய பூமானாகிய தானப்பமுதலியாரென்பவர் இந்த மதுரையம்பதியிலே மடாலயங்கட்டிவித்து சில கிராமங்களுடன் தானமிட்டிருக்கின்றனர். இவ்வாறே சேரசோழபாண்டி நாட்டுவேளாளரும் தொண்டைநாட்டுவேளாளரும் மடாலயங்கள் கட்டிக்கொடுத்துக் கிராமங்களைத் தானஞ்செய்திருக்கின்றார்கள்.

குருபுத்திரர்களாய ஆதீனத்தம்பிரான் சுவாமிகள் சம்பாதித்த கல்விப்பொருளையும் செல்வப்பொருளையும் அளவிட்டுச் சொல்ல முடியாதாகிலும் சுருக்கமாக இதன் கடையிற் காட்டியிருக்கிறேன்.

இவையெல்லாநிற்க பதினாறாவது பட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிக சுவாமிகள் மிகக்கற்றுணர்ந்தவராய்த் துறவொழுக்கமுடையவராயிருந்து சிவஞான சித்தியாருக்குப்பதவுரை யெழுதினர். அதுமட்டோ நாலுலக்ஷ ரூபாவுக்கு மேற்பெருமான கம்பநேரி, புதுக்குடிஜமீன், கோடாரங்குளம் கொட்டாகுளம் முதலிய கிராமங்களை வாங்கினர். அதுமட்டோ ஆதீனபிரதம மடாலயம் முதலான அநேக மடாலயங்களை இரண்டு லக்ஷ ரூபாவுக்கு மேற்பட்ட திருப்பணிகளை அணிபெறச்செய்தனர். அதுமட்டோ தமது ஆளுகையிலுள்ள சிவாலயங்கள் திருப்பணியும் வெள்ளி வாகனங்களும் திருஆபரணங்களும், செய்ததுடன் கிராமம் பூமிகளும் வாங்கினர். மடாலயங்களில் சபாபதி பூஜையும் மகேசுவர பூஜையும் ஏழைகட்கு அன்னதானமும் புரிந்தனர். இவைகளன்றி அளவற்ற சீடர்களுக்கு சிவதீக்ஷை, சிவபூஜை செய்துவைத்து அவர்களை சிவபத்தர்களாக்கினர். அதுமட்டோ கல்வியிற்சிறந்த மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களை தனது ஆதீனத்து வித்துவானாக்கி கற்போராகிய பிரமசாரி கிருகஸ்தன் சன்னியாசிகட்கு தமிழ் கல்வியும் கல்லிடைக்குறிச்சி முத்துசாஸ்திரிகளை வரவழைத்து சமஸ்கிருதமும் அநேக நன்மாணாக்கர்கட்குப் போதிப்பிக்கச் செய்தனர். இங்ஙனமிவர்கள் வடமொழி தென்மொழிகளை வளர்த்து சைவசமயத்தை விருத்தி செய்தது உலகம் நன்கறிந்ததே.

13694



இவைகளை உள்ளபடி சொல்லியிருக்கிற மாயூரம் முனிசிபு வேதநாயகம்பிள்ளையவர்கள் பாடல், பலவற்றினுமேல விளங்கும் அப்பாடல்கள் தனிச்செய்யுட் சிந்தாமணி யென்னும் பிரபந்தத்திரட்டில் நிறைந்திருக்கின்றன. அப்பாடல்களி இரண்டொன்றை யெடுத்துக்காட்டுவன்,

'தடையில் கொடைச் சுப்பிரமணியையைய
நிற்சார்ந்தவர்கொள்
கொடையை யவர்சொல வேண்டுங்கொலோ
வவர்க்குக்கிசொலும்
இடைசொலுங் கண்டமுங் காதுஞ்சொ
லுமிறுமாப்புடைய
நடைசொலுங் கையிற் குடைசொலும்
வேறென்ன நான் சொல்வதே. (1)

நிசியோடத் தோன்றுந் தினகரன்போல
விந்நிலத்தோர்
பசியோடப் பஞ்சம் பஞ்சாப் பறந்தோட
பதார்த்தமெலாம்
சுசியோட ளிக்கவவதரித்தானற்
றுறைசைதனில்
சசியோடு நேர்முகச் சுப்பிரமண்ய
தயாநிதியே. (2)

வாவென்றுதவ வருஞ் சுப்ரமண்ய
வ்யோதயனே
தாவென்று வெண்ணரண் பாடையிந்நாட்டிற்
றலையெடுக்க
வனென்று கேட்பவரில்லாத் தமிழை
யினிதளிக்க
நானென்று கங்கணங் கட்டிக்கொண்டாயிந்த
நானிலத்தே. (3)

மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்திற்குப் பின் சுப்பிரமணியதேசிக சுவாமிகட்குச் சின்னப்பண்டாரச் சந்நிதியாகவிருந்து, வடமொழி, தென்மொழி யென்னும் இரண்டு பாடைகளிலுள்ள இலக்கண இலக்கிய கடல்களை கரை கண்டுணர்ந்த பேரறிவாளரான நமசிவாயதேசிகசுவாமிகளை அனேக துறவறமூர்த்திகட்கும் இல்லறத்தார்கட்கும் கல்வி பயிற்

றச்செய்தனர். அவர்கள் பரிபூரணமானபின் சேற்றூர் ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களை தனது ஆதீன வித்துவானாக்கி அநேகருக்கு கல்வி கற்பித்தனர். இதுமட்டோ பலவிதமாக கற்றோர்க்கெல்லாம் அன்னம், ஆடை, ஆபரண முதலியவற்றை வரையாது கொடுத்து வள்ளலாயிருந்துதவினர்.

இத்தேசிகசுவாமிகளை மலையாளம் விசாகந்திருநாள் மஹாராஜா அவர்களும் திருவாவடுதுறையில் வந்து கண்டு மெச்சிப் புகழ்ந்து சிறப்புப்பெற்றுப்போயினர்.

இத்தகைப் பெரியோராகிய தேசிகசுவாமிகள் திருமேனி வியோகமெய்தியபின் ஐயோ! ஆதீனமுறைகளெல்லாங் கெட்டுப் போயின. ஞான வைராக்கிய நல்லொழுக்கத்துடன் பெருங்கொடை வள்ளலாகிய சுப்பிரமணிய சறகுரு சுவாமிகள் பிரிவாற்றாது ஆதீனத்தில் வித்துவான் சுவாமிகள் பல்லோருள் வித்துவான் பழனிக்குமார தம்பிரானும், வித்துவான் புலிக்குட்டி இராமலிங்க தம்பிரானும் இன்னும் சில தம்பிரான்களும் வித்துவான் மகா மகோபத்தியாயர் சாமிநாத அய்யரவர்கள் முதலான அநேகர்கள்பாடிய பாடல்கள் ஷை தனிச்செய்யுட் சிந்தாமணி நூலில் விரிவாக அமைந்திருக்கின்றன அவைகளிற்:

## பழனிக்குமார தம்பிரான் பாடல்.

ஆட்கமனையசுப்பிரமணியவண்ணலை
யேகன்றநாட்டொடங்கி
நாடுறுகனபாடிகண்மறையோர்கண் ஞான
சாத்திரிகள்பாவலர்கள்
பாடகர்தமிழ்நாவலர்கள்யாரையுமேபார்த்தனன்
றேடியுங்காணேன்
வாடுறூஉன்பால்வரவழைத்தனையோ
மற்றெனைத்தகாதெனவரைந்தே. (1

## புலிக்குட்டி இராமலிங்கதம்பிரான் பாடல்.

மதுரம்பழுத்துத் தேன்றுளிக்கும் வளச்செம்பாகக்
கவிபுகலும் வலிமை யடியேன்
பெற்றது நின்மலர்ந்த கருணையாலன்றோ
இதுவன்றியு மப்பாடலை யின்னிசையோடெவருஞ்
சிரமசைக்கவிசைக்கும் வலிமைபெற்றது
நின்னினிய கருணையாலன்றோ

 13694

சதுர்தங்கிய விப்புவியடியேஞ்சாமி வருகவென்று கரத்
தலைமேற் குவிக்கப்பெற்றது நின்சாலுங்
கருணையாலன்றோ
கதுவுமிந்த நன்றியினைக் கடையேன் மறப்பனோ
துறைசைக்கண் வாழ்குரு
சுப்பிரமணிய கருணாநிதியே கற்பகமே (1)

வாசமலர்வாய்திறந்தெனை வாவென்றழைத்துப்படித்
தோர்கள் மல்குஞ்சபையினிடு விருத்தி
மாநாவலர்காளிவன்காளி
தாசனனையான் கற்பனைப்பாச்சீர்ற்றும் வலிமையா
லென்று தமியேன் புகன்றகவிமுழுதுஞ்
சாற்றக்கேட்டப் பெருஞ்சபையில்
நேசவந்தப் பாவலர்போனீயும் வியக்கும் பெருமபேறு
நீசனேன் பெற்றுய்யாமனெடுந்தூரத்தி
லிருப்பதுவே.
ஈசபெருநதண்டனையுன்றோ விதன்மேலுந் தண்டனை
யுண்டோ இசைப்பாய் குரு சுப்பிர
மணியவெந்தாயருட் சிந்தாமணியே. (2)

---

## மகா மகோபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ
## வே. சாமிநாதய்யரவர்கள் பாடல்.

---

எணுக்கு நூற்பொருள்களெல்லா மெடுத்தினிது
மாணுக்கர்க்கோது திருவாய்மலரைக் காண்பதென்றோ (1)
தெய்வத்தமிழின் செழுஞ்சுவையைப் பாராட்டும்
சைவக்கொழுந்தின் சபைகாண்ப தெந்நாளோ (2)
தன்வருத்தம்பாராது சந்ததமுமே பிறர்பால்
மன்வருத்தம்போக்கியருள்வள்ளறனைக்காண்பதென்றோ (3)

இச்சற்குரு சுவாமிகளுக்குப்பின் உபதேச முறைபெறுது அம்பலவாண தேசிகரென்று பெயர்வைத்திருந்தவர்கள் அன்ன தானமும், வித்தியாதானமுங் கொடையும செய்பவர்போலபாவனை காட்டி துறவொழுக்கஞ் சிறிதுமில்லாமற் கெடுத்தார்கள். சிவா லயமடாலயங்களிற் பூசை, திருப்பணி முதலியவற்றையுமொழுங் காக நடத்தாமலும ஆசாரியருக்குரிய கல்வி ஞானமில்லாமலும் சைவ சமயநெறியை யுலகிற்குப் போதிப்பிக்கக்கூடியவர்களை நிய மிக்காமலும் ஆதீனத்திற்கு பிள்ளைகளாகிய தம்பிரான் திருக்கூட் டங்கட்குச் செய்யவேண்டிய முறைமைகளைசசெய்யாமலும அவர்

களை நூதனமாகச் சேர்க்காமலுந் தேவார முதலிய திருமுறை
களைப்பண்ணுடனோதும் பரம்பரையிலுள்ள ஆதீன ஓதுவா மூர்த்
திகளை ஆதரவு செய்து அவர்களை விருத்தி செய்யாமலும் வித்தி
யாதானத்தை நடத்தாமலும் தெக்ஷணத்திலுள்ள சைவர்களாகிய
சீடருக்கெல்லாம் உபதேசிக்கிற சின்னப்பண்டாரச்சந்நிதி தான
மாகிய கல்லிடைக்குறிச்சி மடாலயத்திற் சின்னப்பண்டாரச் சந்
நிதிகளை அபிடேகஞ்செய்துவைக்காமலும் காசி முதற் கன்னியா
குமரிவரை ஆதீனத்திற்குரிய கிளைமடாலயங்களிலே, சபாபதி
பூசை செய்தற்கும் மகேசுர பூசை செய்தற்கும் ஏழைகட்கு
அன்னதானஞ்செய்தற்கும் மற்றும் யேற்பட்ட தருமங்கள்செய்து
மிஞ்சியதை ஆதீனத்திற் சேரும்படி செய்தற்குரியவர்களாகிய
காறுபாறுத் தம்பிரான் கட்டளைத்தம்பிரான் மடபதித்தம்பிரான்
களை நியமிக்காமலும் அங்கங்கே இடிந்து கிடக்கிற மடாலயங்க
ளின் திருப்பணிகளைச்செய்து சீர்திருத்தஞ்செய்யாமலும் ஆதீ
னத்திற் குருலிங்க சங்கமபரிபாலனத்திற்குரிய தருமச்சொத்துக்
களை விருத்திசெய்யாமலும் திருவாவடுதுறையில் வசித்திராமல்
திருவிடைமருதூரில் வந்திருந்துகொண்டு தருமச் சொத்துக்கள்
பலவற்றை விற்றும் ஒற்றிவைத்தும் அடமானஞ்செய்தும் அநேக
கிராமங்களை 10-௵ 8-௵ 5-௵ சங்கை வைத்து முன் பணம்
வாங்கியும் ஆதீன சங்கம சொத்துக்களையும் கிராமங்களிலுள்ள
விருக்ஷங்களையும் வெட்டி விற்றும் கடனாகப் பெரும் பொருளை
வாங்கி துர்விநியோக வீண்காரியத்திற்கன்றி சற்காரியங்களிற்
செலவு செய்யாமலும் முப்பத்திரண்டுவருட காலமிருந்து அனி
யாயமாக ஆதீனத்திற்கு கேடு விளைத்தார்கள். இவர்கள் காலத்
திற் கூடாவொழுக்க முதலியவற்றிற்கு வீண் செலவு செய்தது
இரண்டுகோடி ரூபாவுக்கு மேலிருக்கும். இவைகளையெல்லாம்
மனதிற் பொறுக்கமுடியாமல் வருத்தமுற்று யான் ஸ்ரீ அம்பல
வாண பண்டாரச்சந்நிதியவர்கட்கு ஒவ்வொரு சமயங்களில்
நேரிலும் லட்டர் மூலமாகவும் தருமப்பொருளை வீண் செலவு
செய்யக்கூடாது ஆதீன தருமச்சொத்து வரும்படியைக்கொண்டு
ஏற்பட்ட தருமஞ் செய்யுங்கள், தருமமே ஜெயங்கொடுக்கும்,
தருமந்தான் தலைகாக்கும், சன்னியாசிகளையும் ஏழைகளையும் துன்
புறுத்தி அவர்கள் சாபங்களை பெற்றுக்கொள்ளவேண்டாமென்று
பலதடவைகளில் லட்டர்கள் மூலமாகச் சொல்லியும் பயன்பட
வில்லை.

ஆதீனத் தருமப்பொருள்களிப்படி அநியாயமாகப்போவது
பார்த்து சகிக்கமுடியாமல் யான் முதலான சில தம்பிரான்கள்
பெரு வருத்தமுற்று ஆதீனத்திற்குரிய தருமப்பொருள்களை வீண்
செலவில்லாமல் யேற்பட்ட முறைப்படி நடைபெற வேண்டுமென்

றும் கல்வி ஞானத்துடன் அபிடேகமுறைப்படி பெற்ற பண்டார சந்நிதிகளாயிருக்கவேண்டுமென்றும், கும்பகோணம் சப் கோர்ட்டில் 1918௵ ஒ. எஸ். நிர். 71-ஆகப் பிராது செய்திருந்தது யாவருக்குந் தெரியவரும். அதற்கு அப்பண்டாரச்சந்நிதியவர்கள் கிராமங்கள் யாவும தம்முடைய சர்க்கியூட்டுக் கட்டிடமென்றும் சொத்துக்கள் யாவும் தமக்கு சொந்தச்சொத்தென்றும் அதனாலே மடத்திற்கு வரவு செலவு கணக்குகள் வைத்துக்கொள்ளவில்லையென்றும, தம்பிரான்கள் யாவரும சர்வெண்டுயென்றும் ஆகையால் ஸ்கீம் செய்யக்கூடாதென்றும் ஸ்டேட்டுமெண்டு கொடுத்தார்கள். இப்பிரதிவாதி சொல்வது முழுவதும் பொய்யென்று கண்டுகொண்டு கும்பகோணம் சப் ஜட்ஜியவர்கள் ஸ்கீமிருக்கவேண்டியதுதான் யென்றும் முற்றிலும் விசாரணையாகும்வரை ஷை அம்பலவாண பண்டாரசந்நிதியவர்கள் கும்பகோணம் சப் கோர்ட்டாரவர்கட்குளடங்கிய ரிசீவராகயிருக்கவும், வரும்படியின் வரவு செலவு கணக்குகள் கொடுக்கவும், மடத்தின் அவசியமில்லாத கடன்களை ஆக்ஷேபிக்கவுமாக உத்திரவு செய்தார்கள். இந்தக் கேசு பூராவும் விசாரித்து முடிவுக்குவருமுன் ஷை அம்பலவாண பண்டாரச்சந்நிதியவர்கள் காலஞ்சென்றுவிட்டார்கள்.

அவர்கள் ஸ்தானத்தில் அக்கிரமமாக பிரவேசித்திருந்த வைத்தியநாதத்தம்பிரானவர்கள் சுப்பிரமணிய தேசிகரென பெயர் வைத்துக்கொண்டு பதினெட்டு மாதமிருந்து காலஞ்சென்றுவிட்டார்கள். இவர்களும முன்னிருந்தவர்கள் செய்த கூடாவொழுக்க முதலியவற்றையே நடத்திப்போனார்கள். இவர்கள் காலஞ்செல்லும்போது இவர்களால் நியமிக்கப்பட்ட தெக்ஷணங்காறுபாறு வைத்திலிங்கத் தம்பிரானவர்கள் இப்போது பண்டாரச்சந்நிதி ஸ்தானத்திலிருந்துகொண்டு வைத்திலிங்க தேசிகரென்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இவர்கள் ஆசாரியருக்குரிய கல்வி ஞானம் முதலியவில்லாமையால் பண்டாரசந்நிதி யென்கிற குரு ஸ்தானத்திற்கு சிறிதும் தகுதியில்லாதவர்கள்.

முற்கூறிய பெருமைவாய்ந்த திருவாவடுதுறை யாதீனமுறைகளை சீர்திருத்தஞ்செய்ய முயற்சித்துக்கொண்டிருக்கிற யான்முதலான தம்பிரான்களுடன் சைவ குருபீடத்திலும் சைவ சமயத்

திலும் அபிமானமுள்ள இலஞ்சி ஈசுரம்பிள்ளையவர்களும் ஐக்கோர்ட்டு வக்கீலாகிய கடையம் சங்கராராயரென்றவர்களும் வாதிகளாயுள்ள தம்பிரான்களுடன் எங்களையும் வாதிகளாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கும்பகோணம் சப் கோர்ட்டில் பெட்டிஷன் கொடுத்ததை கோர்ட்டாரவர்கள் விசாரிக்க இப்போது வைத்திலிங்க தேசிகரென பெயர் வைத்துக்கொண்டிருப்பவர்கள் யோக்கியமில்லாத சிலர் துர்ப்போதனைகளைக் கேட்டுக்கொண்டு இவர்களெல்லாம் ஆதீனத்திற்கு முறையான சீடர்களில்லையென்றும ௸ இரண்டு பிள்ளைமார்களும் வாதிகளாகச் சேர்த்துக்கொள்வதற்கு எவ்வித பாத்தியமுமில்லையென்று கவுண்டர் ஸ்டேட்டுமெண்டு கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில் இதுவரை யெத்தனையோ கோடிக்கணக்கான சைவர்கள் எந்த ஆதீனத்திலும் சீடராகவிருந்து சிவதீக்ஷை சிவபூஜை முதலியன பெற்றிருக்கிறார்கள். விபூதி, ருத்திராக்ஷம் பூணுகிற எந்த சைவனும் சன்னியாச ஆச்சிரமமுடைய எந்த சைவ ஆதீன சீர்திருத்த விஷயத்திலும் தலையிட்டு உழைக்கலாம். சன்னியாசியை ஊர், பெயர், சாதி, குலம், கோத்திரம் முதலியன விசாரிக்காது எந்த ஆச்சிரமத்தாரும் எந்த வருணத்தாரும் வணங்க பாத்தியமிருக்கும்போது அச்சன்னியாசிகள் மடாலயத்திற்கு விக்கினம வந்தபோது பொது ஜனங்கள் தலையிட்டு நடத்தக்கூடாதென்று சொல்வது நம்முடைய சைவாதீன மடாலயங்களையும் சைவ சமயத்தையும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும் கெடுத்துவிடவேண்டுமென்ற தப்பெண்ணமேயென்று தெரிந்து கொள்ளுங்கள்.

இப்படி இவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுப்பதற்கு வேறு காரணமுமுண்டு அதாவது சைவத்திருவாளர்களெல்லாம் தங்கள் மடாலயத்தை கவனியாத குறைவினாலும், குரு லிங்க சங்கம பத்திக் குறைவினாலுமென்று உறுதியாகச் சொல்லுவேன். இன்னமும் சைவத்திருவாளர்கள் கவனியாதிருந்தாற் கறையான் புற்றெடுக்க பாம்பு குடியிருந்து கொண்டதுபோல நம்முடைய சாதி சமயத்திற்கிணங்காத மாயாவாதிகள் புகுந்து நமது சைவ ஆதீனத்தை தன்சுவாதீனமாக்கிசம்சாதிசமயத்தைக்கெடுத்துவிடுவார்கள்,

நமது சைவ ஆதீனமடாலயத்தில் இதுவரை குருபீடத்திலிருந்தவர்கள் வடமொழி தென்மொழி கடல்களினிலை கண்டுணர்ந்து அறிவு, ஒழுக்கம், அன்பு, வாய்மை, தவம், பொறை, அடக்கம், கொடை, உயர்குணம் முதலியவற்றை மேற்கொண்ட துறவற சிகாமணிகளாய் குணமென்னுங்குன்றேறியிருந்ததறிவீர்கள். தற்காலத்தில் ஒரு நன்மையுமில்லாத கேடுவந்து சேர்ந்ததேயென்று துக்கப்பட்டுத் துயருறாதார் யார்?

கிறிஸ்தவ, மகமதிய, புத்தமத சம்பந்தமான தேவாலயங்களும், மடாலயங்களும், அதன் கல்விச்சாலைகளும், சைவர்களல்லாத மற்ற ஜாதிக்காரர்களும் முன்னேற்றமடைந்து பிரகாசிக்க அச் ஜாதிசமய குருமார்கள் தங்கள் மதத்திற்கும் மத கல்விக்கும் உழைக்கிற உழைப்பு தாங்கள் முன்னேற்றமடையவே. இது தெரிந்து உலகம் அவர்களைப் பாராட்டுகிறது. அவர்கள் செவிடு, குருடு, ஊமை, முதலானவர்களைக்கூட கல்விஞானமுடையவராக்கின்றார்களே! நமது சைவ சமயமும் தமிழ்ப்பாஷையும் அதற்கேற்பட்ட மடாலயங்களுந்தான் ஆதரிப்பாரின்றி கெட்டுப்போக வேண்டுமே! நமது தமிழும் ஜாதி சமயமுங் கெட்டுக்கிடக்கிற நிலைமையை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் என் மனம் அனலிடைப்பட்ட மெழுகென உள்ளுருகி யென் அறிவை அழித்திடுகின்றது. அந்தோ யார்பாலுறைப்பன் யாதொருவன் யென் செய்வன்,

ஆனாலும் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்றபடி சைவத் திருவாளர்களுடன் யென்னைய தேசாபிமானம் பாஷாபிமானம் சாதிஅபிமானம் சமயஅபிமானம் குரு லிங்க சங்கம அபிமானமுடையார்களெல்லாம் வணக்கத்துடன் தெரிவித்து கேட்டுக்கொண்டால் கவனித்து ஊக்கத்துடன் முன்வந்து சைவ ஆதீனத்திற்கும் குரு லிங்க சங்கமர்கட்கும் அநியாயமாகவந்து தோன்றியிருக்கிற தீமைகளை விலக்கி நன்மை செய்வீர்களென்று துணிவுடன் தெரிவித்துக்கொண்டேன். தற்சமயம் குறையா ஊக்கத்துடன் முன்வந்து உதவிசெய்ய அஞ்சுவீர்களானால் நமது சைவ ஆதீனங்களும் சைவ சமயநெறிகளும் போனவழிதெரியாது புல் முளைத்துவிடுமென்பதிற் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

இப்படியழியவே சைவர்கள் பெருமையும் கல்வியும் நடையுடை பாவனைகளும் அழிந்து சிவ பக்தியுங் குறைந்து நாம் சரீரமெடுத்ததினாலாய பயனடையாமலும் நித்தியானந்த மோக்ஷானந்தத்தையடையாமலும் பின்னும் கீழான ஜெனனமெடுத்து உழல நேரிடும்.

இருப்பது பொய் போவது மெய்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
யேதுவருமோ அறியேனென்று பெரியோ
ரெல்லாம் முறையிட்டிருக்கின்றார்கள்.

ஆகையால் எல்லா நன்மைகளும் குருகடாக்ஷத்தினாலேதானாகவேண்டும்.

உருவன்றியே நின்றுருவம் புணர்க்கும்
கருவன்றியே நின்றுதான் கருவாகும
மருவன்றியே நின்ற மாயப்பிரானை
குருவன்றி யாவருங் காணவொண்ணாதே.

யென்பதையும்,

தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று.

யென்பதையும், வேளாளரென்பதற்கு உபகரிக்குந் தன்மையுடையோரென்பதையும் நினைந்து உங்கள் சைவ ஆதீனத்தை நிலைநாட்டி வைத்து, உங்கள் புகழையும் நிலைநாட்டி நித்தியானந்த சுகவாழ்வுற்றிருக்க சிவபெருமானை பிரார்த்திக்கிற,

மதுரை
20—10—25

திருவாவடுதுறை ஆதீனம்,
சங்கரலிங்க தம்பிரான்

## திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை யாதீனத்திற்கு கல்விப்பொருளை சம்பாதித்து வைத்த ஆசிரியர்கள் பெயர்.

1. மெய்கண்ட சிவாசாரியர்
2. அருணந்தி சிவாசாரியர்
3. உமாபதி சிவாசாரியர்
4. அம்பலவாண தேசிக சுவாமிகள்
5. துவிதீய தெக்ஷிணாமூர்த்தி தேசிக சுவாமிகள்
6. உருத்திரகோடி தேசிக சுவாமிகள்
7. வேலப்ப தேசிகசுவாமிகள்
8. திரிதீய சுவாமிநாத தேசிக சுவாமிகள்
9. திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்
10. பதினாலாவது பட்டம், சுப்பிரமணியதேசிக சுவாமிகள்
11. பதினாறுவதுபட்டம், சுப்பிரமணியதேசிக சுவாமிகள்
12. ஷை துவிதீய சின்னச்சந்நிதான நமசிவாய தேசிக சுவாமிகள்

---

## தம்பிரான்கள் பெயர்.

1. திராவிடபாஷிய கர்த்தராகிய மாதவ சிவஞான சுவாமிகள்
2. கவிச்சக்கிரவர்த்தியாகிய கச்சியப்ப சுவாமிகள்
3. இலக்கணம் சிதம்பரநாத சுவாமிகள்
4. தொட்டிக்கலைசை சுப்பிமணிய சுவாமிகள்
5. சாஸ்திரம் சாமிநாத சுவாமிகள்
6. நமசிவாய சுவாமிகள்
7. சிவப்பிரகாச சுவாமிகள்
8. திருச்சிற்றம்பலம் சுவாமிகள்
9. சுப்பிரமணிய சுவாமிகள்
10. இலக்கணம் அம்பலவாண சுவாமிகள்
11. தாண்டவராய சுவாமிகள்

12. குமாரசுவாமி சுவாமிகள்
13. ஆறுமுகச்சுவாமிகள்
14. பழனிக்குமார சுவாமிகள்
15. புலிக்குட்டி இராமலிங்க சுவாமிகள்
16. திருச்சிற்றம்பல சுவாமிகள்
17. சின்னவகைக்காறுபாறு நமசிவாய சுவாமிகள்

---

## திருக்கயிலாயபரம்பரை திருவாவடுதுறை யாதீனத்திற்கு செல்வப்பொருளை சம்பாதித்த குருசாமிகள், தம்பிரான்கள் பெயரட்டவணை.

1 உருத்திரகோடி தேசிகர்
2 மாசிலாமணி தேசிகர்
3 திருச்சிற்றம்பல தேசிகர்
4 பதினைந்தாவது பட்டம், அம்பலவாண தேசிகர்
5 பதினாறாவதுபட்டம சுப்பிரமணிய தேசிகர்
6 ஷை சின்னசந்நிதானம நமசிவாய தேசிகர்

---

## தம்பிரான்கள் பெயரட்டவணை.

1. ஈசான தம்பிரான்
2. கரபாத்திர தம்பிரான்
3. திருவாவடுதுறைத்தலங்காறுபாறு ஆறுமுகத்தம்பிரான்
4. தெக்ஷணாங்காறுபாறு, கனகசபாபதித்தம்பிரான்
5. ஷை வேணுவனலிங்கத்தம்பிரான்
6. ஷை பன்னிருகைத்தம்பிரான்
7. சின்னவகைக்காறுபாறு. நமசிவாயத்தம்பிரான்
8. தேசிகமூர்த்தி தம்பிரான
9 அறுபத்துமூவர் தம்பிரான்
10. மேற்கரைவைத்திலிங்கதம்பிரான்

11. புளியக்குறிச்சி வைத்திலிங்க தம்பிரான்
12. பதநைவைத்திலிங்க தம்பிரான்
13. சாமிமலை வைத்திலிங்க தம்பிரான்
14. ஸ்ரீவைகுண்டம் சுப்பிரமணியத்தம்பிரான்
15. திருமகல ஊர் பொன்னம்பலத்தம்பிரான்
19. விஜயநாராயணம்சிவகுருநாத தம்பிரான் ஷடி நமசிவாய தம்பிரான்
17. பளியன்குடி சாமிநாத தம்பிரான்
18. வேதமூர்த்தி தம்பிரான்
19. பாவநாசம்கோயில்பிச்சைக்கட்டளைத்தம்பிரான்
20. ஆத்தூர் கோயில பிச்சைக்கட்டளைத்தம்பிரான்
21. சிந்தாமணி அம்பலவாண தம்பிரான்
22. கடம்பர் கோயில [illegible]லிங்கததம்பிரான்
23. சிதம்பரம் பரமசிவத்தம்பிரான்
24. தேவூர்சங்கரலிங்கதம்பிரான்
25. காசி கண்ணப்பத்தம்பிரான்
26 இராமேசுவரம் விசுவலிங்க தம்பிரான்
27. திருவதிகை சிவஞானத்தம்பிரான்

இன்னும் அநேக தம்பிரான்கள் பல்லாயிரக்கணக்கான நகைகளை அம்பா திருநக சந்நிதானங்களிடம் ஒப்புவித்து நேககருமங்களை நடத்திவர கொடுத்திருப்பதுண்டென்பது கவனிக்கத்தக்கது.

---

## திருக்கயிலாயபரம்பரை திருவாவடுதுறை யாதீனத்திற்கு கிராமம் பூமிகளைத்தானஞ்செய்த முடியன்னர்கள், குறுநிலமன்னர்கள், பிரபுக்கள் பெயரட்டவணை

1. மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்கள்
2. சேதுபதிமன்னரவர்கள்
3. சிவகெங்கை மன்னரவர்கள்
4. புதுக்கோட்டை மன்னரவர்கள்
5. எட்டயபுரம் மன்னரவர்கள்

6. சொக்கம்பட்டி மன்னரவர்கள்
7. சிவகிரி மன்னரவர்கள்
8. சேற்றூர் மன்னரவர்கள்
9. ஊற்றுமலை மன்னரவர்கள்
10. ஊர்காடு மன்னரவர்கள்
11. சிங்கம்பட்டி மன்னரவர்கள்
12. கடம்பூர், மணியாச்சி மன்னரவர்கள்
13. சோழவந்தான் தானப்பமுதலியாரவர்கள்
14. தொட்டிக்கலைசை கேசவமுதலியாரவர்கள்
15. சிதம்பரம் நாட்டுப்பிள்ளையவர்கள்
16. மண்ணச்சநல்லூர் ஆவுடையப்பபிள்ளை, சந்திரசேகர பிள்ளையவர்கள்
17. ஷை பாப்பம்மாளவர்கள்
18. விஜயநாராயணம்பண்ணையாரவர்கள்
19. புலியக்குறிச்சி, செங்களகுறிச்சி பண்ணையாரவர்கள்
20. பேட்டை சொக்கலிங்கம் பிள்ளையவர்கள்
21 குன்னூர் முதலியாரவர்கள்
22. இராஜபாளையம் பண்ணையார்வள்ளிநாயகம்பிள்ளையவர்க
23. வாசுதேவநல்லூர் நல்லகண்ணுப்பிள்ளையவர்கள்
24. புளியன்குடிப்பிள்ளைமாரவர்கள்
25. ஆறுமுகநேரி கிராம மகாஜனங்கள்
26. பாஸ்கர சேதுபதி மன்னரவர்கள்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090